**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement -12 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

**1)** "வெள்ளத்தால் அழியாது வெந்தணலால் / வேகாது வேந்த ராலும் / கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் / நிறைவன்றிக் குறைவு றாது / கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு / மிகஎளிது கல்வி" - என்னும் பாடல் இடம்பெறும் நூல் எது?

A) தனிப்பாடல் திரட்டு B) நாலடியார்
C) மூதுரை D) நல்வழி

**2)** பொருத்துக

(i) உவமைக் கவிஞர் - 1. கல்யாணசுந்தரனார்
(ii) நாமக்கல் கவிஞர் - 2. உடுமலை நாராயணகவி
(iii) பகுத்தறிவுக் கவிராயர் - 3. சுரதா
(iv) தேசியம் காத்த செம்மல் - 4. வெ. ராமலிங்கனார்
(v) தமிழ்த் தென்றல் - 5. முத்துராமலிங்கனார்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 2 | 5 | 1 |
| C) | 4 | 3 | 2 | 5 | 1 |
| D) | 3 | 4 | 2 | 1 | 5 |

**3)** சுரதாவின் இயற்பெயர்?

A) இராசகோபாலன் B) துரை மாணிக்கம்
C) அரங்கசாமி (எ) எத்திராசலு D) இராதாகிருஷ்ணன்

**4)** செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை ஆகிய நயங்களை உரைநடைக்குள் கொண்டுவந்தவர் யார் என்பர்?

A) வ.உ.சிதம்பரனார் B) சுப்ரமணிய சிவா C) பாரதியார் D) இரா.பி.சேது

**5)** "கல் அளை" என்பதன் பொருள் என்ன?

A) சிறுகல் குகை B) ஈன்ற வயிறு
C) கற்குகை D) புலிவந்து தங்கிய குகை

**6)** பத்துப்பாட்டிலுள்ள எந்த இரண்டு நூல்களை உருத்திரங்கண்ணனார் இயற்றியுள்ளார்?

A) முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி B) நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு
C) பட்டினப்பாலை, மலைபடுகடாம் D) பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை

**7)** "இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் / என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால் / துன்பங்கள் நீங்கும் சுகம் வரும்" என்றவர் யார்?

A) தாராபாரதி B) பாரதியார்
C) பாரதிதாசன் D) நாமக்கல் கவிஞர்

**8)** திருக்குறள் வகுப்புகள் நடத்தியும், தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பியவர்?

A) மு. வரதராசனார் B) வீ. முனுசாமி

C) திரு.வி.கல்யானசுந்தரனார் D) இரா இளங்குமரனார்

**9)** தமிழ்மொழி எம்மாதிரியான அறிவை நமக்குத் தருவதாக வெ.இராமலிங்கனார் கூறுகிறார்?

A) அன்பறிவு நிரம்பிய B) அறிவுஞானம் நிரம்பிய

C) அருள்நெறி நிரம்பிய D) பக்திநெறி நிரம்பிய

**10)** "அதிமது ரத்தழையை யானைகள் தின்றபடி / புதுநடை போடுமடீ - கிளியே பூங்குயில் கூவுமடி" என்ற பாடலடிகளை இயற்றியவர் யார்?

A) சுரதா B) பாரதியார் C) வாணிதாசன் D) சு.சமுத்திரம்

**11)** ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் எதுவேயாகும் என்று நாலடியார் கூறுகிறது?

A) மலையளவு சொத்து B) புண்ணியம் C) தங்கம் D) கல்வி

**12)** வெற்பு மற்றும் கழனி ஆகிய சொற்களின் பொருட்கள் முறையே ______ & _____

A) கடல் & அலை B) மலை & வயல்

C) நிலம், மலை D) வயல் & மலை

**13)** பொருத்துக:

(i) பரிதி - 1. காடு

(ii) பரி - 2. சூரியன்

(iii) நெறி - 3. குதிரை

(iv) மதுரம் - 4. வழி

(v) இயவு - 5. சுவை

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| C) | 4 | 3 | 2 | 5 | 1 |
| D) | 5 | 4 | 3 | 2 | 1 |

**14)** "புலிசேர்ந்து போகிய கல்அளை போல / ஈன்ற வயிறோ இதுவே / தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" என்ற பாடல் அடிகள் இடம்பெறும் நூல் எது? இப்பாடலை இயற்றிய புலவர் யார்?

A) புறநானூறு & காவற்பெண்டு B) அகநானூறு & வெண்ணிக்குயத்தியார்

C) புறநானூறு & வெண்ணிக்குயத்தியார் D) நல்வழி & ஔவையார்

**15)** பின்வரும் எது கதைப்பாடலின் ஒரு வகை அல்ல?

A) சமூகக்கதைப் பாடல் B) பழமொழிக் கதைப்பாடல்

C) வரலாற்றுக் கதைப் பாடல் D) புராணக்கதை பாடல்

ETW ACADEMY

**16)** நெஞ்சினில் தூய்மை உண்டாக்கிடும் வீரம் எதனால் வருமென பாரதிதாசன் கூறுகிறார்?

A) அழகு B) வீரம் C) செல்வம் D) கல்வி

**17)** நாமக்கல் கவிஞரோடு தொடர்புடையவை எவை?

1. காந்தியக் கவிஞர்
2. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர்
3. கத்தி யின்றி ரத்த மின்றி / யுத்த மொன்று வருகுது - பாடலை வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது பாடினார்

A) 1 & 2 B) 1 & 3 C) 2 & 3 D) 1, 2 & 3

**18)** "கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி / நாட்டத்தில் கொள்ளா ரடீ! - கிளியே நாளில் மறப்பாரடீ" என்ற கிளிக்கண்ணி பாடலை இயற்றியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்
C) சுரதா D) சுத்தானந்த பாரதியார்

**19)** பொருந்தாத பொருள் எது?

A) வாரணம் - யானை B) அருகாமை - பக்கத்தில்
C) சிங்காரம் - அழகு D) கமுகு - பாக்கு

**20)** பின்வரும் யாரைப் பற்றிய கதைப்பாடல்களை நா.வானமாமலை அவர்கள் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்?

A) வேலுநாச்சியார் B) மருது சகோதரர்கள்
C) பூலித்தேவன் D) கட்டபொம்மன்

**21)** வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது?

A) தூது இலக்கியம் B) ஆற்றுப்படை இலக்கியம்
C) உலா இலக்கியம் D) கலம்பகம்

**22)** சாகித்ய அகாதெமி விருதுபெற்ற பாரதிதாசனின் படைப்பு எது, அது எவ்வகை நூல்?

A) கண்ணகி புரட்சிக்காப்பியம், கவிதை நூல் B) பிசிராந்தையார், நாடக நூல்
C) இசையமுது, கவிதை நூல் D) குடும்ப விளக்கு, உரைநடை நூல்

**23)** நாலடியார்

1. சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்டது.
2. பதினென் மேற்கணக்கு நூல்களில் ஒன்று
3. திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புகளைக் கொண்டது
4. இது 400 ஆசிரியப்பாக்களால் ஆனது

A) 1 & 3 B) 2, 3 & 4
C) 1, 3 & 4 D) 1 & 4

ETW ACADEMY

**24)** வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

A) வாய்த்து + ஈயீன்
B) வாய் + தீயின்
C) வாய்த்து +தீயின்
D) வாய் + ஈயீன்

**25)** தவறான கூற்று எது?

A) ஒரு பாடலின் சொற்களில், முதல் எழுத்து ஒன்றுபோல் வந்தால் அந்த நயம் மோனை என்று அழைக்கப்படும்

B) ஒரு பாடலின் சொற்களில், கடைசி எழுத்து ஒன்றுபோல் வந்தால் அந்த நயம் தொடை என்று அழைக்கப்படும்

C) ஒரு பாடலின் சொற்களில், இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வந்தால் அந்த நயம் எதுகை என்று அழைக்கப்படும்

D) மேற்கண்ட ஏதுமில்லை

**26)** பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம்?

A) கலம்பகம்
B) மடல்
C) குறவஞ்சி
D) பரணி

**27)** பொருந்தா சொல் எது?

A) பசு
B) விடு
C) ஆறு
D) கரு

**28)** பூவின் ஏழு நிலைகளின் சரியான வரிசை எது?

A) அரும்பு, முகை, மொட்டு, மலர், அலர், வீ, செம்மல்
B) அரும்பு, மொட்டு, முகை, அலர், மலர், வீ, செம்மல்
C) அரும்பு, மொட்டு, மலர், முகை, அலர், வீ, செம்மல்
D) அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல்

**29)** "அரிச்சந்திரர் நாடகம் பார்த்த காந்தியடிகள் இனி தம் வாழ்வில் பொய்யே பேசக்கூடாது என்று நினைத்தார். காந்தியடிகளி பொய் பேசாத பண்பே காந்தியடிகள் எல்லார் இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது." - மேற்கண்டதற்கு பொருத்தமான திருக்குறள் எது?

A) ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து / அழுக்காறு இலாத இயல்பு
B) வாய்மை எனப்ப டுவது யாதெனின் யாதொன்றும் / தீமை இலாத சொலல்.
C) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் / உள்ளத்துள் எல்லாம் உளன்.
D) மேற்கண்டது அனைத்தும்

**30)** குற்றியலிகரம் பின்வரும் எந்த இரண்டு இடங்களில் வரும்?

A) யாது, மியா
B) அஃது, எஃகு
C) உயிர்த்தொடர் மற்றும் நெடில்தொடர் குற்றியலுகரத்தின் பின்
D) மேற்கண்ட எதுவுமில்லை

ETW ACADEMY

**31)** சு,டு,று ஆகியவை இறுதியாக அமையும் ______ குற்றியலுகரச் சொற்கள் இல்லை

A) வன்தொடர் B) இடைத்தொடர் C) மென்தொடர் D) உயிர்த்தொடர்

**32)** பொருத்துக:

(i) கதைப்பாடல் - 1. Ballad

(ii) பேச்சாற்றல் - 2. Phonology

(iii) துணிவு - 3. Orthography

(iv) ஒலியியல் - 4. Elocution

(v) எழுத்திலக்கணம் - 5. Courage

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 5 | 2 | 3 |
| B) | 4 | 1 | 5 | 3 | 2 |
| C) | 1 | 4 | 5 | 2 | 3 |
| D) | 1 | 4 | 5 | 3 | 2 |

**33)** பின்வருவனவற்றுள் மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் ______

A) போன்ம் B) மருண்ம்

C) பழம் விழுந்தது D) பணம் கிடைத்தது

**34)** ஒரு குழுவினார் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சொற்கள் ______ எனப்படும்.

A) இடைக்கரடக்கல் B) மங்கலம் C) குழூஉக்குறி D) இலக்கணை

**35)** பொருந்தாதது எது?

A) நான் - தன்மை B) யாம் - முன்னிலை

C) படர்க்கை - பொறியியல் வல்லுநர் D) மேற்கண்ட எதுவுமில்லை

**36)** குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு எத்தனை வகைகளாகப் பிரிக்கப்படுகிறது?

A) ஆறு B) பத்து C) இரண்டு D) மூன்று

**37)** "சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும். புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்" என்றவர் யார்?

A) நீதிபதி மாண்டேகு B) நீதிபதி ஹென்றி

C) நீதிபதி சார்லஸ் D) நீதிபதி பின்ஹே

**38)** ஞெகிழி என்னும் சொல்லின் பொருள் என்ன?

A) தூண் B) தீச்சுடர்

C) கடல் D) சாந்து பூசப்பட்ட மாடம்

**39)** நாலடியாரின் வேறுபெயர் அல்லாதது?

A) வேளாண்வேதம் B) சமணர் காப்பியம்

C) நாலடி நானூறு D) A & C

**40)** 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ______.

A) அரை B) ஒன்று C) ஒன்றரை D) இரண்டு

**41)** இசைப்பாடல் என்று அழைக்கப்படும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை C) பரிபாடல் D) ஐங்குறுநூறு

**42)** சுரதாவால் இயற்றப்படாத நூல்?

A) அமுதும் தேனும் B) தேன்மழை C) தமிழின்பம் D) துறைமுகம்

**43)** கூற்று: இலக்கணப் போலியை "பின்முன்னாகத் தொக்க போலி" எனவும் குறிப்பிடுவர்.

காரணம்: இலக்கணப்போலி என்பது பெரும்பாலும் சொற்களின் முன்பின் பகுதிகள் இடம்மாறி வருவதையே குறிக்கும்.

A) கூற்றும் காரணமும் சரி; மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

B) கூற்று சரி; காரணம் தவறு

C) கூற்று தவறு; காரணம் சரி

D) கூற்றும் காரணமும் தவறு

**44)** இலக்கணப்போலிக்கு எடுத்துக்காட்டு அல்லாதவை எவை?

A) முன்றில், புறநகர் B) கோவை, குடந்தை

C) தசை, கடைக்கண் D) நுனிக்கிளை, கால்வாய்

**45)** வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவதை எவ்வாறு அழைப்பர்?

A) தற்சமம் B) தற்பவம் C) தற்சமயம் D) தற்பாவம்

**46)** "வானம் ஊன்றிய மதலை போல / ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி / விண்பொர நிவந்த வேயா மாடத்து" - என்ற அடிகளை இயற்றியவர் யார்?

A) மாங்குடி மருதனார் B) உருத்திரங்கண்ணனார்

C) பெருங்கௌசிகனார் D) நத்தத்தனார்

**47)** உரவுநீர் அழுவம் - என்ற தொடரில் அழுவம் என்பதன் பொருள்?

A) காற்று B) வானம் C) கடல் D) மலை

**48)** வைப்புழி என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பொருள் சேமித்து வைக்கும் இடம் B) கல்வி நிலையம்

C) ஒருவரால் கொள்ளப்படாது D) தீயால் அழியாத இடம்

**49)** வடமொழி தவிர, பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் ......................... எனப்படும்.

A) இயற்சொற்கள் B) திரிசொற்கள் C) திசைச்சொற்கள் D) வடசொற்கள்

**50)** உலகில் மிகவும் அருமையானது எதுவென்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) கல்வி B) காலம் C) விருந்தோம்பல் D) கொடை

ETW ACADEMY

**51)** தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாக உடுமலை நாராயணக்கவி குறிப்பிடுவது?

A) தேன்மணம் கமழும் தென்றல்

B) சுவைமிகு கனிகள் & பொன் போன்ற தானியங்கள்

C) நன்செய் நிலவளம்

D) மேற்கண்ட அனைத்தும்

**52)** மொழியின் உயிர் நாடியாக விளங்குவது?

A) எழுத்து மொழி B) பேச்சு மொழி C) உடல் மொழி D) சைகை மொழி

**53)** ராஜமார்த்தாண்டன் நடத்திய சிற்றிதழ் எது?

A) கொல்லிப்பாவை B) எழுத்து C) கனவு D) தமிழ்ச்சிட்டு

**54)** ‘சுட்ட பழங்கள்’ என்று குறிப்பிடப்படுபவை _____.

A) ஒட்டிய பழங்கள் B) சூடான பழங்கள்

C) வேகவைத்த பழங்கள் D) சுடப்பட்ட பழங்கள்

**55)** "வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்" என்று பாடியவர் யார்?

A) பாரதியார் B) இரா.பி.சேது

C) பாரதிதாசனார் D) நாமக்கல் கவிஞர்

**56)** வ.உ.சிதம்பரனார் சிறையில் இருந்தபோது எழுதிய நூல்கள் எவை?

1. மெய்யறிவு
2. மெய்யறம்
3. மெய்யாக்கம்

A) 1 & 2 B) 1 & 3 C) 2 & 3 D) 1, 2 & 3

**57)** இலக்கணமுடைய சொல்லுக்கு எடுத்துக்காட்டு அல்லாதது எது?

A) நிலம், மரம் B) வான் C) எழுது D) முன்றில்

**58)** 'உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம் / புலவுத்திரைப் பெருங்கடல் நீர்இடைப் போழ' என்று துவங்கும் பாடல் இடம்பெறும் நூல்?

A) அகநானூறு B) ஐங்குறுநூறு C) கலித்தொகை D) நற்றிணை

**59)** கலித்தொகையின் மருதத் திணைப் பாடல்கள் எத்தனை?

A) 29 B) 35 C) 17 D) 33

**60)** கல்வி இல்லாத நாட்டைத் திருவள்ளுவர் எவ்வாறு அழைக்கிறார்?

A) ஒளியில்லாத வீடு B) அழகில்லாத வீடு

C) கதவில்லாத வீடு D) விளக்கில்லாத வீடு

**61)** "உலகப்பொதுமறை திருக்குறள் விளக்கம்", "சிந்தனைக் களஞ்சியம் ஆகிய நூல்களை இயற்றியவர் யார்?

A) திருவாரூர் தங்கராசு B) இரா.இளங்குமாரனார் C) சாமி. சிதம்பரனார் D) வீ. முனிசாமி

ETW ACADEMY

**62)** இரா.பி.சேது அவர்களின் நூல் அல்லாதது எது?

A) ஆற்றங்கரையினிலே B) தமிழ் மருந்து

C) கடற்கரையினிலே D) தமிழகம் - ஊரும் பேரும்

**63)** சொல்லை ஒலிப்பதில் உள்ள ஏற்ற இறக்கத்தால் பொருள் வேறுபடும் என்பதை, "எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில் / திரிபும் தத்தமில் சிறிது உள வாகும்" என்று கூறும் நூற்பா இடம்பெற்ற நூல்?

A) தொல்காப்பியம் B) நன்னூல் C) வீரசோழியம் D) நேமிநாதம்

**64)** எந்த வகை யானைகளில் ஆண் யானை, பெண் யானை என இரண்டுக்குமே தந்தம் உண்டு?

A) ஆசிய யானைகள் B) தாய்லாந்து யானைகள்

C) அமெரிக்க யானைகள் D) ஆப்பிரிக்க யானைகள்

**65)** முத்துராமலிங்கனாரை போலவே வட இந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத் தடைவிதிக்கப்பட்ட தலைவர் யார்?

A) பிபின் சந்திரபால் B) பால கங்காதர திலகர்

C) லாலா லஜபதிராய் D) கோபாலகிருஷ்ண கோகலே

**66)** அகநானூறு வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) நெடுநல்வாடை B) கூத்தராற்றுப்படை C) மலைபடுகடாம் D) நெடுந்தொகை

**67)** 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடியவர் ________.

A) திருக்குறளார் B) திருவள்ளுவர் C) பாரதியார் D) பாரதிதாசன்

**68)** காவற்பெண்டு இயற்றிய எத்தனை பாடல்கள் புறநானூற்றில் உள்ளன?

A) 1 B) 2 C) 3 D) 4

**69)** "பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும்" என்றவர் யார்?

A) தேவநேயப்பாவாணர் B) இரா. சீனிவாசன்

C) இரா.இளங்குமாரனார் D) மு.வரதராசனார்

**70)** தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம்?

A) மேட்டுப்பாளையம் B) குந்தா

C) ஊட்டி D) கோபிசெட்டிபாளையம்

**71)** இந்திய அரசால், முத்துராமலிங்கனார் உருவம் பதித்த தபால் தலை வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?

A) 1985 B) 1989 C) 1991 D) 1995

**72)** விச்சை என்ற சொல்லின் பொருள் என்ன?

A) கல்வி B) செல்வம் C) மோகித்தல் D) கவர்தல்

**73)** பட்டினப்பாலை எத்தனை அடிகளால் ஆனது?

A) 301 அடிகள் B) 501 அடிகள் C) 285 அடிகள் D) 342 அடிகள்

ETW ACADEMY

74) ஓரெழுத்து ஒருமொழியில் இடம்பெறும் இரண்டு குறில் சொற்கள் எவை?

A) நொ, து B) அ, இ C) கொ, பு D) உ, எ

75) இரா.பி.சேது அவர்களின் எந்த நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதமி விருது பெற்ற முதல் நூலாகும்?

A) ஆற்றங்கரையினிலே B) தமிழ் விருந்து

C) தமிழின்பம் D) தமிழகம் - ஊரும் பேரும்

76) சுப்ரபாரதிமணியன் இயற்றாத நூல் எது?

A) மின்னல் வேட்டை B) தண்ணீர் யுத்தம்

C) புத்துமண் D) கதை சொல்லும் கதை

77) சுப்ரபாரதிமணியன் நடத்திவரும் இலக்கிய இதழ் எது?

A) எழுத்து B) உயிர்ம்மை

C) கனவு D) மேற்கண்ட அனைத்தும்

78) 'அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் / பெருங்கலி வங்கம்' என்ற பாடல் இடம்பெற்ற இலக்கியம்?

A) பரிபாடல் B) பட்டினப்பாலை C) மதுரைக்காஞ்சி D) பதிற்றுப்பத்து

79) பாரதிதாசன் அவர்களின் நூல் அல்லாதது எது?

A) இசையமுது B) இருண்டவீடு

C) அகல் விளக்கு D) கண்ணகி புரட்சி காப்பியம்

80) காவற்பெண்டு எந்த சோழமன்னனின் செவிலித்தாயாக விளங்கியவர் என்பர்?

A) போரவைக் கோப்பெரு நற்கிள்ளி B) நெடுங்கிள்ளி நலங்கிள்ளி

C) இளஞ்சேட்சென்னி கரிகால் சோழன் D) செம்பியன் எள்ளாலன்

81) நாமக்கல் கவிஞர் இயற்றாத நூல்?

A) மலைக்கள்ளன் B) என் சரிதம் C) என் கதை D) சங்கொலி

82) காட்டைக் குறிக்கும் வேறுபெயர் அல்லாதது?

A) பொழில் B) அடவி C) அரில் D) பொத்தை

83) விலங்குகள் அலைந்து திரியும் காட்டை சுரதா எவ்வாறு வர்ணிக்கிறார்?

A) கடவுள் காப்பகம், B) இயற்கை விடுதி C) பூலோக சொர்க்கம் D) அன்னை மடி

84) பாஞ்சாலங்குறிச்சியில் _____ நாயை விரட்டிடும்.

A) முயல் B) நரி C) பரி D) புலி

85) பின்வருவனவற்றுள் ஆற்றுப்படை இலக்கியம் எது?

A) மலைபடுகடாம் B) மதுரைக்காஞ்சி

C) முல்லைப்பாட்டு D) குறிஞ்சிப்பாட்டு

ETW ACADEMY

86) 'வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை / மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார் / எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன / விச்சைமற்று அல்ல பிற' என்னும் பாடல் இடம்பெறும் நூல் எது?

A) இறையனார் களவியல் B) நாலடியார்
C) இன்னா நாற்பது D) ஆசாரக்கோவை

87) ஒன்றல்ல இரண்டல்ல தம்பி சொல்ல / ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில் - எனத் துவங்கும் கவிதையை இயற்றியவர் யார்?

A) நாமக்கல் கவிஞர் B) சுரதா
C) பாரதிதாசன் D) உடுமலை நாராயணகவி

88) திருக்குறளின் பொருட்பால் பகுதியில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

A) 25 B) 70 C) 38 D) 133

89) "கரிகாலன் கல்லணையைக் கட்டினான்" என்ற தொடரில் உள்ள எழுவாய் எது?

A) கரிகாலன் B) கல்லணை C) கட்டினான் D) ஐ

90) முள் + தீது மற்றும் கல் + தீது ஆகியவற்றில் நடைபெறும் குறுக்கம் எது?

A) ஐகாரக்குறுக்கம் B) ஔகாரக்குறுக்கம்
C) மகரக்குறுக்கம் D) ஆய்தக் குறுக்கம்

91) பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரி?

கூற்று 1: வாயில் என்பது இலக்கணப்போலி ஆகும்

கூற்று 2: வாசல் என்பது இலக்கணம் ஆகும்

A) கூற்றுகள் இரண்டும் சரி B) கூற்று 1 மட்டும் சரி
C) கூற்று 2 மட்டும் சரி D) இரு கூற்றுகளும் தவறு

92) சிறந்த தமிழ்க் கவிதைகளைத் தொகுத்து எத்தலைப்பில் இராஜமார்த்தாண்டன் நூலாக்கியுள்ளார்?

A) வெள்ளைப் பறவை B) கொங்குதேர் வாழ்க்கை
C) கையொப்பம் D) ஒரு கிராமத்து நதி

93) கடற்பயணத்தை முந்நீர் வழக்கம் என்று குறிப்பிடும் நூல்?

A) பட்டினப்பாலை B) மதுரைக்காஞ்சி C) அகநானூறு D) தொல்காப்பியம்

94) குறில், நெடில் எழுத்துக்களைக் குறிக்கப் பயன்படும் சொல் எது?

A) கரம் B) கான் C) காரம் D) கேனம்

95) வங்கூழ், அழுவம் ஆகியவை?

A) இயற்சொற்கள் B) திரிசொற்கள் C) திசைச்சொற்கள் D) வடசொற்கள்

96) தனிக்குறிலை தொடர்ந்து வரும் வல்லின உகரங்கள் மற்றும் வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை எவ்வாறு அழைப்பர்?

A) குற்றியலுகரம் B) குற்றியலிகரம் C) முற்றியலுகரம் D) மகரகுறுக்கம்

ETW ACADEMY

**97)** வ.உ.சி துவங்கிய சுதேசக் கப்பல் கம்பெனியின் தலைவராக இருந்தவர் யார்?

A) வ.உ.சிதம்பரனார் B) சுப்ரமண்ய சிவா C) பாண்டித்துரையார் D) பாரதியார்

**98)** பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன்?

A) கரிகாலன் B) ஓய்மான் நல்லியக்கோடன்

C) தொண்டைமான் இளந்திரையன் D) தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்

**99)** பின்வரும் எது

1. உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்

2. கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.

A) உடல் மொழி B) இலக்கிய மொழி C) பேச்சுமொழி D) எழுத்து மொழி

**100)** துஷ்டி கேட்டல் என்றால் என்ன?

A) மகிழ்ச்சிப்பெருக்கு B) துக்கம் விசாரித்தல்

C) பாராட்டுதல் D) புகழ்ந்து பேசுதல்

**101)** பஞ்சாயத்து ராஜ் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு என்ன?

A) 1952 B) 1953 C) 1955 D) 1957

**102)** உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

A) மவுண்ட்பேட்டன் பிரபு B) கானிங் பிரபு C) டல்ஹௌசி பிரபு D) ரிப்பன் பிரபு

**103)** 73வது சட்டத்திருத்தம் பற்றிய கூற்றுகளை ஆராய்க:

1. ஒன்றிய பஞ்சாயத்து என்பது ஒரு இடைநிலை பஞ்சாயத்து ஆகும். இதன் எல்லையையும் ஆளுநர் தன் அறிக்கையின் மூலம் தீர்மானிக்கிறார்.

2. இந்த சட்டத்திருத்தம், மாநில அரசுக்கு பஞ்சாயத்துகளை அமைப்பதிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களை அமைப்பதிலும் முழு சுதந்திரத்தை வழங்குகிறது.

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி C) இரண்டும் தவறு D) இரண்டும் சரி

**104)** தாமாகவே ஒளியை உமிழாத பொருளுக்கு எடுத்துக்காட்டு?

A) மின் விளக்கு B) மெழுகுவர்த்தி C) சந்திரன் D) நட்சத்திரம்

**105)** பசுமை ஹைட்ரஜன் பிரிக்ஸ் மாநாட்டை நடத்திய நாடு?

A) பிரேசில் B) ரஷ்யா C) சீனா D) இந்தியா

**106)** பின்வரும் வாக்கியங்களில் தவறானவை எவை?

1. ஆங்கிலேயச் செல்வாக்கின் தாக்கத்திற்கு ஆட்பட்ட முதல் மாகாணம் சென்னை

2. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், முதல் சமூக - சமய சீர்திருத்த இயக்கத்தை துவங்கியவர் ராஜாராம் மோகன் ராய்

3. 19ம் நூற்றாண்டின் துவக்கத்தில், மறுமலர்ச்சி சிந்தனைகள் பரவுவதில் முக்கிய பங்கு வகித்தது வானொலி தொழில்நுட்பம் ஆகும்

A) 1 & 3 B) 2 & 3 C) 1 மட்டும் D) 1 & 2

ETW ACADEMY

**107)** பிரார்த்தனை சமாஜம் எங்கு நிறுவப்பட்டது?

A) பம்பாய் B) பீகார் C) வங்காளம் D) பஞ்சாப்

**108)** கூற்று: தமிழ்நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் தனித்தன்மை வாய்ந்ததாகும்.

காரணம்: அது விடுதலை பெறுவதற்கான போராட்டமாக மட்டுமல்லாமல், சமூகத் தடைகளிலிருந்து விடுதலை பெறுவதற்குமான போராட்டமாகவும் அமைந்தது

A) கூற்றும் காரணமும் சரி; காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

B) கூற்றும் காரணமும் சரி; காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

C) கூற்று சரி; காரணம் தவறு

D) கூற்றும் காரணமும் தவறு

**109)** சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் மற்றும் செயலாளர் முறையே?

A) P. ரங்கையா, P. அனந்தாச்சார்லு B) P. அனந்தாச்சார்லு, P. ரங்கையா

C) P. ரங்கையா, M. வீரராகவாச்சாரி D) M. வீரராகவாச்சாரி, P. அனந்தாச்சார்லு

**110)** சென்னை திராவிடர் கழகம் (Madras Dravidian Association) உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1912 B) 1916 C) 1918 D) 1910

**111)** P. தியாகராயர், T.M. நாயர், C. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொதுஅரங்கில் என்று கூடினர்?

A) 1915 நவம்பர் 20 B) 1916 நவம்பர் 20 C) 1917 நவம்பர் 20 D) 1918 நவம்பர் 20

**112)** தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கியவைகளை தேர்க:

1. அச்சு இயந்திரத்தின் அறிமுகம்
2. திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகள்
3. தமிழில் எழுதப்பட்ட பக்தி இலக்கியங்களின் வளர்ச்சி
4. தமிழை ஆதரித்த சமண சமயத்தின் எழுச்சி

A) 1ம் 3ம் மட்டும் B) 2ம் 4ம் மட்டும்

C) 1ம் 2ம் அட்டும் D) 1ம் 4ம் மட்டும்

**113)** தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்டு வெளியானது எப்போது?

A) 1835 B) 1812 C) 1821 D) 1853

**114)** சர் தாமஸ் ரோ, ஜஹாங்கீரிடமிருந்து தொழிற்சாலைகள் அமைக்க எந்த ஆண்டு அனுமதி பெற்றார்?

A) 1610 இல் B) 1614 இல் C) 1612 இல் D) 1616 இல்

**115)** உபரிகளை இங்கிலாந்திற்கு கடத்துவதில், கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகம் வெற்றி பெற்றது. இந்திய தலைவர்கள் இப்பிரச்சினையை எதனுடன் ஒப்பிட்டனர்?

A) சர்வாதிகாரம் B) எதேச்சிகாரம்

C) சுரண்டல் D) இவையனைத்தும்

ETW ACADEMY

**116)** பின்வரும் கூற்றுகளில் எவை சரி?

1. 73 மற்றும் 74 வது அரசமைப்பு சட்டத் திருத்தங்கள் எல்.எம்.சிங்வி குழு (1986) பரிந்துறையின் படி நிறைவேற்றப்பட்டன

2. இரண்டடுக்கு முறை மற்றும் அரசியல் கட்சிகள் அனைத்து நிலைத் தேர்தல்களிலும் பங்குபெறவேண்டும் என்று பரிந்துரைத்த குழு அசோக் மேத்தா குழு (1977 - 78)

3. உள்ளாட்சி பிரதிநிதிகள், திட்டக்குழுவால் நியமிக்கப்படுதல் என்ற 'வேரற்ற புற்கள்' முறையை பரிந்துரைத்தக் குழு ஜி.வி.கே. ராவ் குழு (1985)

A) 1 & 3 B) 1 & 2 C) 2 & 3 D) 1, 2 & 3

**117)** கிராம ஊராட்சியின் ஆய்வாளராக செயல்படுபவர் யார்?

A) வட்டாச்சியர் B) நிதி ஆணையர்
C) மாவட்ட ஆட்சியர் D) கிராம நிர்வாக அலுவலர்

**118)** உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி விரிவாக விளக்கும், காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் யார் காலத்தை சேர்ந்தவை?

A) முதலாம் ராஜராஜன் B) முதலாம் பராந்தகன்
C) இராஜேந்திர சோழன் D) முதலாம் குலோத்துங்கன்

**119)** மருத்துவர்கள் உருப்பெருக்கியாகப் பயன்படுத்தும் ஆடி?

A) குவியாடி B) குழியாடி C) சமதள ஆடி D) இரு குவிய ஆடி

**120)** பருவமழை துவங்குவதை முன்னிட்டு, ராஜ பிரபா திருவிழா கொண்டாடப்படும் மாநிலம் எது?

A) சிக்கிம் B) ஒடிசா C) ஹரியானா D) மேற்கு வங்கம்

**121)** யாருடைய முயற்சியால் 1872-இல் சிறப்பு திருமண சட்டம் நிறைவேற்றப்பட்டது?

A) பண்டித கார்வே B) ஈஸ்வர சந்திர வித்யா சாகர்
C) ராஜாராம் மோகன் ராய் D) கேசவ சந்திர சென்

**122)** தவறான இணை எது?

A) பூனே விதவை பெண்கள் இல்லம் - பண்டித கார்வே
B) புனே சர்வஜனிக் சபா - மகாதேவ் கோவிந்த் ரானடே
C) ஆரிய மகிளா சமாஜ் - பண்டித ரமாபாய்
D) அலிகார் இயக்கம் - மிர்சா குலாம் அகமது

**123)** நீதிக்கட்சியைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் தவறானதை சுட்டுக:

A) நீதிக்கட்சி வகுப்புவாத பிரதிநிதித்துவத்தைக் கோரியது
B) சென்னை அரசாங்கம் நீதிக் கட்சியை ஆதரிக்கவில்லை
C) ஆங்கிலேயரின் ஆட்சி பிராமணர் அல்லாதோரின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியுமென நீதிக்கட்சி நம்பியது.
D) தவறானது ஏதுமில்லை

**124)** தமிழ்நாட்டில், ரௌலட் சட்டம் எனும் கருப்புச் சட்டத்தை எதிர்த்து கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்ட நாள் எது?

A) 1919 மார்ச் 28 B) 1919 ஏப்ரல் 6 C) 1919 ஜூன் 4 D) 1919 மே 12

**125)** தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்டதால் வி.கோ. சூரிய நாராயணசாஸ்திரி தமது பெயரை எவ்வாறு மாற்றிக்கொண்டார்?

A) சுந்தரனார் B) மறைமலை அடிகளார்
C) பரிதிமாற் கலைஞர் D) தெவநேயப் பாவாணர்

**126)** தனித் தமிழ் இயக்கம் தொடங்கப்பட்டது எப்போது?

A) 1956 B) 1936 C) 1916 D) 1906

**127)** நீதிக்கட்சியால் முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?

A) 1920, செப்டம்பர் 20 B) 1921 செப்டம்பர் 16 C) 1921 ஆகஸ்ட் 16 D) 1922 ஆகஸ்ட் 15

**128)** பிரிட்டிஷ் துணிமணிகளின் சந்தையாக இந்தியா விளங்கிய காலம் எது

A) 1858 முதல் 1901 வரை B) 1813 முதல் 1858 வரை
C) 1813 முதல் 1901 வரை D) 1858 முதல் 1935 வரை

**129)** காரன்வாலிஸ் எந்த ஆண்டு, நிரந்தர சொத்துரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தினார்?

A) 1789 B) 1793 C) 1788 D) 1799

**130)** கீழ்க்காணும் எந்த முறையில் நிலத்தை சொந்தம் கொண்டாடும் உரிமை, நிலத்துக்கான கட்டுப்பாடு போன்றவை நில உரிமையாளரிடம் இருந்தது?

A) ஜமீன்தாரி முறை B) மஹல்வாரி முறை
C) இரயத்துவாரி முறை D) இவை எதுவும் இல்லை

**131)** கிராம சபை கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவர் யார்?

A) மாவட்ட ஆட்சியர் B) கிராம நிர்வாக அலுவலர்
C) ஊராட்சி மன்றத் தலைவர் D) மாவட்ட நிதி ஆணையர்

**132)** ஊராட்சி ஒன்றிய தலைவராக (Chairman) தேர்ந்தெடுக்கப்படுபவர் யார்?

A) ஏதேனும் ஒரு நகராட்சி தலைவர் B) ஏதேனும் ஒரு ஊராட்சியின் தலைவர்
C) ஏதேனும் ஒரு ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் D) ஏதேனும் ஒரு நகரசபை உறுப்பினர்

**133)** குடிமக்களின் சமூக, பொருளாதார அரசியல் நடவடிக்கைகளுக்கான அடிப்படை அமைப்பாக பஞ்சாயத்துகள் இருக்கும்படி ஒரு திட்ட வரைபடத்தை தயாரித்தவர் யார்?

A) சீமா சாஸ்திரி B) ஷர்மா நாராயணன் C) சீனுவாச ஐயங்கார் D) நரசிம்ம ஐயர்

**134)** தனது முதல் பரிந்துரையாக மாவட்ட பஞ்சாயத்து நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்ற குழு எது?

A) பல்வந்த்ராய் மேத்தா குழு B) அசோக் மேத்தா குழு
C) சி.எச். அனுமந்த்ராவ் குழு D) ஜி.வி.கே. ராவ் குழு

ETW ACADEMY

**135)** _____ தத்துவத்தைப் பயன்படுத்தி வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கான மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

A) மின்காந்த தூண்டல் தத்துவம் B) காந்த ஒதுக்கத் தத்துவம்
C) புவிகாந்தத் தூண்டல் தத்துவம் D) காந்தத் திருப்புத்திறன்

**136)** 2032ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நகரம்?

A) கேப்டவுன் B) பீஜீங் C) பிரிஸ்பேன் D) டெல்லி

**137)** ராமமோகன் ராய் அவர்களுக்கு, இராஜா என்ற பட்டத்தை அளித்த மன்னர் யார்?

A) இரண்டாம் பகதூர் ஷா B) இரண்டாம் அக்பர் ஷா
C) முதலாம் பகதூர் ஷா D) இரண்டாம் ஷா ஆலம்

**138)** ராஜாராம் மோகன் ராயின் மரணத்திற்குப் பிறகு, யார் புத்துயிர் ஊட்டாமல் இருந்திருந்தால், பிரம்ம சமாஜம் விரைவாக வீழ்ந்திருக்கும்?

A) தேவேந்திரநாத் தாகூர் B) கேசவ் சந்திர சென்
C) ஈஸ்வர் சந்திர வித்யா சாகர் D) நீதிபதி ரானடே

**139)** 'சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை' என்ற திலகரின் கூற்றுக்கு அடிப்படையாக அமைந்த "சுயராஜ்ஜிய உணர்வை" மக்களிடம் தோற்றுவித்தவர் யார்?

A) ராஜாராம் மோகன் ராய் B) ஈஸ்வர் சந்திர வித்யா சாகர்
C) தயானந்த சரஸ்வதி D) இரவீந்திரநாத் தாகூர்

**140)** இந்திய அரசால், சாரதாச் சட்டம் கொண்டுவரப்பட்டு, பெண்ணின் திருமண வயது 14 ஆக உயர்த்தப்பட்ட ஆண்டு என்ன?

A) 1928 B) 1930 C) 1931 D) 1934

**141)** பிரம்ம சமாஜ நூல்களை தமக்கு ஆதாரமாகக் கொண்ட சீர்திருத்தவாதி யார்?

A) ஈஸ்வர் சந்திர வித்யா சாகர் B) கேசவ் சந்திர்ட சென்
C) தேவேந்திரநாத் தாகூர் D) மகாதேவ் ரானடே

**142)** இவற்றுள் எது ஒரு மீட்டெடுப்பு இயக்கம் ஆகும்?

A) பிரம்ம சமாஜம் B) ஆரிய சமாஜம்
C) அலிகார் இயக்கம் D) மேற்கண்ட அனைத்தும்

**143)** தமிழகத்தில் சட்டமறுப்பு இயக்கத்தை எப்போது தொடங்க முடிவு செய்யப்பட்டது?

A) 1920 அக்டோபர் B) 1921 நவம்பர் C) 1920 செப்டம்பர் D) 1921 டிசம்பர்

**144)** வைக்கம் போராட்டத்திற்குப்பின் ஈரோடு திரும்பியதும், எதைப் பற்றி பேசியதற்காக பெரியார் கைது செய்யப்பட்டார்?

A) கள்ளுக்கடை மறியல் B) கதர் விற்பனை முன்னேற்றம்
C) வகுப்புவாரி பிரதிநித்துவம் D) பிராமணர் அல்லாதோர் உரிமை

ETW ACADEMY

**145)** முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானத்தை நாம் நிறைவேற்றினால் நம் எதிர்கால சந்ததி நம்மை "நமது நாட்டுக்கு உரிமை வாங்கித்தந்தவரென்றே கொண்டாடும்" என்று குறிப்பிட்டவர் யார்?

A) சர். ஆர். கே. சண்முகம் B) முனுசாமி
C) டாக்டர். சி. நடேசனார் D) டி.எம். நாயர்

**146)** அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய "பணியாளர் தேர்வு வாரியத்தை" நீதிக்கட்சி அமைத்த ஆண்டு என்ன?

A) 1924 B) 1929 C) 1926 D) 1928

**147)** 1924 முதல் 1939 வரையிலான காலகட்டத்தில் கீழ்காணும் எந்த தொழில் நிறுவனங்கள் பாதுகாப்பு வளையத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன?

A) பருத்தி நெசவாலைகள் B) சணல், தீப்பெட்டி
C) இரும்பு, எஃகு D) இவை அனைத்தும்

**148)** இந்தியாவின் தொழில் கொள்கை கீழ்காணும் எந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை?

A) 1948 & 1956 B) 1967 & 1969 C) 1977 & 1980 D) 1990 & 1991

**149)** இந்தியாவின் முதல் தொழில் கொள்கை தீர்மானத்தின் முக்கிய நோக்கம் பின்வரும் எதை அறிமுகப்படுத்துதல் ஆகும்?

A) வேளாண் பொருளாதாரம் B) கலப்பு பொருளாதாரம்
C) தற்சார்பு பொருளாதாரம் D) கலப்புப் பொருளாதாரம்

**150)** 73-வது சட்ட திருத்தமும் 74-வது சட்ட திருத்தமும் இந்திய அரசமைப்பில் எந்தெந்த பகுதிகளை இணைத்தது?

A) X மற்றும் XI(A) B) X மற்றும் X(A) C) IX மற்றும் X(A) D) IX மற்றும் IX(A)

**151)** பஞ்சாயத்தின் பொறுப்புகள் எவை என்று தெளிவாகவும் விரிவாகவும் அரசமைப்பின் _____ வது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது

A) 11வது B) 12 வது C) 10 வது D) 9 வது

**152)** 73வது சட்டத்திருத்தம், தாழ்த்தப்பட்டவருக்கு பஞ்சாயத்தின் எந்த அடுக்கில் இட ஒதுக்கீடு வழங்குகிறது?

A) முதலாம் அடுக்கில் B) இரண்டாம் அடுக்கில்
C) மூன்றாம் அடுக்கில் D) அனைத்து அடுக்குகளிலும்

**153)** நகர மன்ற கூட்டங்களை கூட்டுவதும், அதற்கு தலைமை வகிப்பதும் யாருடைய பணி?

A) நகர மன்ற தலைவர் B) நகர மன்ற துணைத்தலைவர்
C) நகராட்சி ஆணையர் D) நகர் மன்ற அலுவலர்

**154)** உள்ளாட்சி மற்றும் நகராட்சியில் உருவாக்கப்படும் திட்டங்களை ஒன்று சேர்க்கும் பணியை செய்வது எது?

A) நகர்மன்றக் குழு B) நகர சபைக் குழு
C) மாநில திட்டக்குழு D) மாவட்ட திட்டக்குழு

ETW ACADEMY

**155)** 74-வது சட்டத்திருத்தத்தின் படி, நகராட்சி சட்டத்திருத்தத்தை மாநில சட்டத்தில் இணைத்த எவ்வளவு காலத்திற்குள் மாநில நிதிக்குழு அமைக்கப்படவேண்டும்?

A) 6 மாதங்கம் B) 3 மாதங்கள் C) 1 வருடம் D) 10 மாதங்கள்

**156)** மின்தடையின் அலகு?

A) ஓம் / மீட்டர் B) ஓம் / மீட்டர்^2

C) ஓம் மீட்டர் D) மேற்கண்ட எதுவுமில்லை

**157)** பாதரசம் மற்றும் ஆல்கஹாலின் உறைநிலை முறையே _____ & _____

A) -29 டிகிரி செல்சியஸ் மற்றும் -120 டிகிரி செல்சியஸ்

B) -39 டிகிரி செல்சியஸ் மற்றும் -120 டிகிரி செல்சியஸ்

C) -29 டிகிரி செல்சியஸ் மற்றும் -130 டிகிரி செல்சியஸ்

D) -39 டிகிரி செல்சியஸ் மற்றும் -130 டிகிரி செல்சியஸ்

**158)** சர்வதேச யோகா தினம் அனுசரிக்கப்படும் நாள்?

A) ஜூன் 16 B) ஜூன் 19 C) ஜூன் 21 D) ஜூன் 26

**159)** கைம்பெண் மறுமணத்திற்கு ஆதரவான நோக்கத்தில் 1864இல் தொடங்கப்பட்ட இதழ் எது?

A) ராஃப்ட் கோப்தார் B) விவேகவர்தினி C) சத்யார்த்த பிரகாஷ் D) தத்துவபோதினி

**160)** இராமகிருஷ்ணரை 'இறைவனும் மனிதனும் கலந்த வியத்தகு கலவை' என குறிப்பிடுபவர் யார்?

A) விவேகானந்தர் B) அன்னிபெசண்ட்

C) கேசவ் சந்திர சென் D) மதகுரு கிப்பன்ஸ்

**161)** சட்டநாதன் ஆணயத்தின் பரிந்துரையின்படி 1971 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு வரம்பு எத்தனை சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டது?

A) 28 B) 31 C) 34 D) 37

**162)** கீழ்க்காணும் எந்த ஆண்டின் தொழில் கொள்கை பொதுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தது?

A) 1948ஆம் ஆண்டு தொழிற்கொள்கை B) 1956ஆம் ஆண்டு தொழிற்கொள்கை

C) 1977ஆம் ஆண்டு தொழிற்கொள்கை D) 1991ஆம் ஆண்டு தொழிற்கொள்கை

**163)** பொருத்துக

I) மஞ்சள் புரட்சி - A) பெட்ரோலியம்

II) நீல புரட்சி - B) இறால்

III) கருப்பு புரட்சி - C) மீன்

IV) இளஞ்சிவப்பு புரட்சி - D) எண்ணெய் வித்துக்கள்

A) I-d, II-c, III-a, IV-b

B) I-b, II-a, III-c, IV-d

C) I-a, II-c, III-b, IV-d

D) I-c, II-a, III-b, IV-d

ETW ACADEMY

**164)** பொதுத்துறையில் எஃகு நிறுவனங்களின் இடங்களையும் அவை அமைய உதவி செய்த நாடுகளையும் பொருத்துக.

I) ரூர்கேலா (ஒடிசா) - A) ரஷ்ய அரசு

II) பிலாய் (ம.பி) - B) இங்கிலாந்து அரசு

III) துர்காபூர் (மே.வ) - C) ஜெர்மனி

IV) பர்னபூர் (மே.வ) - D) தனியார் துறை

A) I-c, II-a, III-b, IV-d B) I-b, II-a, III-c, IV-d
C) I-a, II-c, III-b, IV-d D) I-c, II-a, III-d, IV-b

**165)** நகராட்சிகளில், பதவி வழி உறுப்பினராக இருப்பவர் யார்?

A) அந்தத் தொகுதி அமைச்சர் B) அந்தத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
C) அந்தத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் D) இவரனைவரும்

**166)** பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

1. நகர சபையின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலில், நியமன உறுப்பினர்களும் வாக்களிக்கலாம்
2. நகர சபைத் தலைவரை, மக்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நியமிக்கின்றனர்.

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

**167)** அன்னிபெசண்ட் இந்தியா வந்த ஆண்டு?

A) 1882 B) 1891 C) 1893 D) 1888

**168)** சைவ அமைப்புகள், யாருடைய தலைமையில் இராமலிங்க அடிகளாருக்கு எதிராக கட்டுரை எழுதும் போரில் ஈடுபட்டனர்?

A) தனிநாயகம் அடிகள் B) குன்றக்குடி மூத்த அடிகளார்
C) மறைமலையடிகளார் D) ஆறுமுக நாவலர்

**169)** இந்தியா எஃகு உற்பத்தியில் உலக அளவில் எந்த இடத்தில் உள்ளது?

A) ஆறாவது B) ஏழாவது C) எட்டாவது D) ஒன்பதாவது

**170)** உலக அளவில் இந்தியா கச்சா சணல் உற்பத்தியிலும் சணல் பொருட்கள் தயாரிப்பிலும் எவ்விடத்தில் உள்ளது?

A) முதலாமிடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**171)** இந்தியாவின் எந்த மாநிலத்தில் 1889ம் ஆண்டு முதன்முறையாக எண்ணெய் கிணறு தோண்டப்பட்டது?

A) மேற்கு வங்காளம் B) ஜார்கண்ட்
C) அருணாச்சலப் பிரதேசம் D) அஸ்ஸாம்

**172)** நகரசபை தேர்தல் முடிந்த எத்தனை நாட்களுக்குள், துணை ஆணையர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி, தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும்?

A) 12 B) 7 C) 14 D) 21

ETW ACADEMY

**173)** நகராட்சி நிலைக்குழுவின் பதவிக்காலம் எவ்வளவு?

A) 2 ஆண்டுகள் B) இரண்டரை ஆண்டுகள்
C) 3 ஆண்டுகள் D) மூன்றரை ஆண்டுகள்

**174)** விவேகானந்தர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

A) இந்தியாவின் விடிவெள்ளி B) இந்திய சமூக சிர்திருத்தத்தின் தந்தை
C) நவீன இந்தியாவின் விடிவெள்ளி D) நவீன இந்திய சமூக சிர்திருத்தத்தின் தந்தை

**175)** இந்தியாவின் பொதுத்துறை வங்கி பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I) பொதுத்துறை வங்கிகளில் அரசின் பங்கு 60 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கும்.
II) பொதுத்துறை வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் மாநில வங்கிகள் என இரு வகைப்படுத்தப்படுகின்றன.

A) I மட்டும் சரி B) II மட்டும் சரி C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

**176)** 10, 15, 30, 45 ஆகிய எண்களின் மீ.பொ.ம காண்க

A) 300 B) 180 C) 30 D) 90

**177)** 96, 64, 128 ஆகியவற்றின் மீ.பொ.கா காண்க.

A) 4 B) 16 C) 32 D) 64

**178)** 2407 மற்றும் 1826 ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க

A) 83 B) 97 C) 87 D) 93

**179)** 1/8, 3/16, 7/28, 5/21 ஆகிய எண்களின் மீ.பொ.வ காண்க

A) 336 B) 1/336 C) 1/110 D) 110

**180)** இரு எண்களின் பெருக்கல் பலன் 600 மற்றும் அவ்விரு எண்களின் மீ.சி.ம 200 எனில் அவ்விரு எண்களின் மீபொவ காண்க

A) 3 B) 6 C) 2 D) 4

**181)** இரு எண்களின் மீபொவ 20, அந்த எண்களின் மீசிம 240. ஒரு எண் 80 எனில் மற்றொரு எண் எது?

A) 40 B) 30 C) 120 D) 60

**182)** இரு எண்களின் மீபொவ = 99. அந்த இரு எண்கள் 198 மற்றும் 1386 எனில் மீசிம=?

A) 1448 B) 1888 C) 1472 D) 2772

**183)** 12, 20, 18 ஆல் வகுபடும் 1000-ஐ விடக் குறைவான மிகப்பெரிய எண் எது?

A) 960 B) 936 C) 990 D) 900

**184)** 24, 36, 48, 60 ஆகிய எண்களால் வகுபட்டு மீதம் 6-ஐக் கொடுக்கும் மிகச்சிறிய எண்?

A) 786 B) 726 C) 884 D) 846

**185)** 209, 348, 419 ஆகிய எண்களை ஒரு மிகப்பெரிய எண் வகுக்கும்போது மீதிகள் முறையே 5, 8, 11 கிடைக்கிறது எனில், அந்த மிகப்பெரிய வகுக்கும் எண் எது?

A) 17 B) 34
C) 68 D) மேற்கண்ட எதுவுமில்லை

ETW ACADEMY

**186)** 2:3:4 என்ற விகிதத்தில் உள்ள மூன்று எண்களின் மீசிம 120 எனில், மீபொவ காண்க

A) 1 B) 10 C) 2 D) 20

**187)** அ மற்றும் ஆ என்ற இரு பகா எண்களின் மீசிம 297 எனில் $அ^2$ - $ஆ^2$ இன் மதிப்பு காண்க. குறிப்பு இங்கு ஆவின் மதிப்பானது அவின் மதிப்பைவிட சிறியது எனக்கொள்க.

A) 608 B) 908 C) 408 D) 808

**188)** இரு எண்களின் மீசிம-வானது அவற்றின் மீபொவ-வின் 22 மடங்கு அதிகம். மீசிம மற்றும் மீபொவ ஆகியவற்றின் கூடுதல் 1380. ஒரு எண் 660 எனில் மற்றொரு எண் எது?

A) 260 B) 120 C) 320 D) 240

**189)** ஒரே இடத்தில் துவங்கி ஒரே திசையில் அ, ஆ, இ ஆகியோர் ஒரு வட்ட வடிவ பூங்காவைச் சுற்றி ஓடுகின்றனர். ஒருமுறை அப்பூங்காவைச் சுற்றிவர அ என்பவர் 126 விநாடிகலையும், ஆ என்பவர் 140 விநாடிகளையும், இ இன்பவர் 196 வினாடிகளையும் எடுத்துக்கொள்கின்றனர் எனில் மூவரும் அதே துவக்கப்புள்ளியில் எத்தனை நிமிடங்களுக்குப் பிறகு சந்திப்பார்கள்?

A) 147 நிமிடங்கள் B) 154 நிமிடங்கள் C) 126 நிமிடங்கள் D) 117 நிமிடங்கள்

**190)** 2385 மற்றும் 1805 ஆகிய எண்களை எந்த மீப்பெரு எண்ணால் வகுத்தால் மீதி 7 கிடைக்கும்?

A) 68 B) 78 C) 48 D) 58

**191)** எந்த மிகச்சிறிய எண்ணை 7 மற்றும் 9 ஆல் வகுக்கும்போது மீதிகள் முறையே 1 மற்றும் 3 கிடைக்கும்?

A) 57 B) 36 C) 50 D) 64

**192)** 6 மீட்டர் 40 செண்டிமீட்டர், 7 மீட்டர் 20 செண்டிமீட்டர் மற்றும் 8 மீட்டர் 80 செண்டிமீட்டர் ஆகியவற்றை துல்லியமாக அளவிடக்கூடிய மிகப்பெரிய அளவுநாடாவின் நீளம்?

A) 80 செ.மீ B) 60 செ.மீ C) 100 செ.மீ D) 90 செ.மீ

**193)** எந்த சிறிய எண்ணை மும்மடங்காக்கும்போது அந்த எண் 48, 84, 112, 56 மற்றும் 64 ஆகிய எண்களால் மீதியின்றி வகுபடும்?

A) 1344 B) 540 C) 448 D) 360

**194)** மூன்று எண்களின் விகிதம் 15 : 23 : 34 மற்றும் அவற்றின் மீப்பெரு பொது காரணி = 12 எனில் அவற்றில் சிறிய எண் எது?

A) 90 B) 180 C) 276 D) 408

**195)** இரண்டு பைகளில் 223 கிலோ மற்றும் 227 கிலோ அளவுடைய தானியங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அவைகள் ஒரே அளவுடைய சிறிய பைகளில் நிரப்பப் படவேண்டுமெனில் அந்தப் பையின் அதிகபட்ச எடை என்ன?

A) 13 கிலோ B) 11 கிலோ C) 7 கிலோ D) 1 கிலோ

**196)** இரு எண்களின் கூட்டுத்தொகை 320. அவற்றின் மீ.பொ.வ = 16. இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஜோடிகளின் எண்ணிக்கை என்ன?

A) 5 ஜோடிகள் B) 12 ஜோடிகள்

C) 10 ஜோடிகள் D) 8 ஜோடிகள்

**197)** மூன்று எண்களின் மீபொவ = 15. அந்த எண்களின் விகிதம் 4:5:6 எனில் அந்த எண்களின் மீசிம என்ன?

A) 300 B) 600 C) 900 D) 1200

**198)** $5x^6 14y^4 z^8$ மற்றும் $x^4 7y^2$ ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க

A) $x^4 7y^2$ B) $x^6 7y^2$ C) $x^4 14y^2$ D) $x^4 7y^2 z^8$

**199)** $(x^2y + xy^2)$ மற்றும் $(x^2 + xy)$ ஆகியவற்றின் மீ.சி.ம காண்க

A) x(x+y) B) y(x+y) C) xy(x+y) D) x+y

**200)** இரு பல்லுறுப்புக் கோவைகளின் மீபொவ மற்றும் மீபொம முறையே x+1 மற்றும் $x^6$-1. மேலும் ஒரு பல்லுறுப்புக் கோவை $x^3$+1 எனில் மற்றொன்றைக் காண்க.

A) (x+1) $(x^3+1)$ B) (x+1) $(x^3-1)$ C) (x-1) $(x^3+1)$ D) (x+1) $(x^3-1)$

***

© ETW Academy